1967 ஜூலை 11]

திரு. ஏ. எம். ராஜா : இதுவரை இந்தக் கணக்கு இயல் ஆராய்ச்சி நிலையம் செய்த சாதனைகள் என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது மிக முக்கியமானதொரு கணித ஆராய்ச்சி நிலையமாக இருந்து வருகிறது. இதன் மூலம் கண்டுபிடிக்கப்படுகிற பல நிலைமைகள் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்திற்கு மிகவும் பயன்படுவனவாக இருக்கின்றன. கணித ஆராய்ச்சி நிலையம் டாட்டா இன்ஸ்டிட்யூட்டில் மட்டும்தான் இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் சென்னையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நிலையங்கள்தான் ஆசியாவிலேயே சிறந்த நிலையங்கள் என்று கூறப்படும் அளவிற்கு இருக்கின்றன. சென்னையில் அமைந்துள்ள இந்தக் கணித ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளைப்பற்றி பரிசிலனை செய்து அறிக்கை தயாரிக்கும்படியாக, டாட்டா இன்ஸ்டிட்யூட்டில் பணி புரிந்து வருகிற ப்ரொஃபெஸர் எம்.ஜி.கே. மேனன் அவர்களை இந்த அரசு கேட்டுக்கொண்டு அவர்களும் பரிசிலனை செய்து இதனால் உருவான பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் நல்ல பல முடிவுகள் வந்திருக்கின்றன என்றும், இந்த நிலையம் எடுத்த முடிவுகளை உலகத்திலேயிருக்கும் வேறு பல நாடுகளில் உள்ள நிலையங்கள்கூட ஏற்று பாராட்டுரை தெரிவித்திருக்கின்றன என்றும், இந்த நிலையத்தினுடைய முயற்சிகள் மேலும் பயன்படும் என்றும் அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் குறிப்பிட்டிருக்கிற அறிக்கையிலுள்ளவற்றைக் குறித்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : கணித இயல் ஆராய்ச்சி நிலையத்தில் எத்தனை பேர் படிக்கிறார்கள்? அவர்களுக்குப் பட்டம் ஏதாவது வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கணித ஆராய்ச்சி நிலையத்தில் பட்டம் வழங்கப்படுவதில்லை. ஆனால், டாக்டர் பட்டம் போன்றவற்றைப் பெறுவதற்காகப் பயிற்றுவிக்கின்ற அத்தகைய முயற்சிகள் நடைபெறுகின்றன. இதிலே படித்தவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். இப்பொழுது எத்தனை பேர் அங்கே பயிற்சி பெறுகிறார்கள் என்பதற்கான குறிப்பு இல்லை.

Manufactue of diesel Engines.

* 253 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a 5 crore project at Ennore near Madras for the manufacture of diesel engines for the high speed fishing boats is to be taken up for implementation soon; and

(*b*) if so, what is the contribution of the Central Government for this project?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்திய அரசு நிறுவனமாகிய மத்திய மீனளக் கார்ப்பரேஷன் மீன்பிடி படகுகளுக்குத் தேவையான மரீன் டீசல் எஞ்சின்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினை எண்ணூரில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு ஏறக்குறைய மூன்று கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்சொன்ன கார்ப்பரேஷன் இந்த மூலதனத்தில் 90 சதவிகிதம் அளிக்கும்.

THIRU K. VINAYAKAM : Sir, when was it started and whether the diesel engines that are produced by this Corporation are any better than those we are already importing? Also have they been tried with the high speed fishing boats?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஜப்பான் கம்பெனியாக இருக்கின்ற யான்மர் டீசல் இன்ஜின் கம்பெனி (ஓஸாகா) யினுடைய கூட்டுறவோடு இந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதாக, வங்காளத்தைச் சேர்ந்த இந்துஸ்தான் யான்மர் லிமிடெட் என்னும் கம்பெனியார் முன்வந்திருக்கிறார்கள். சென்ட்ரல் ஃபிஷரீஸ் கார்ப்பரேஷன் நூற்றுக்கு 90 பங்கு தரும், பாக்கி பத்து பங்கை ஜப்பான் கம்பெனி ஏற்றுக்கொள்ளுகிறது. யான்மர் இன்ஜின்கள்தான் இப்பொழுது மீனவர்களால் விரும்பப்படுகின்றன. அத்தகைய இன்ஜின்களை உற்பத்தி செய்வதன் மூலம் அதற்கு நல்ல கிராக்கி ஏற்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

தமிழகச் சிறு இனாம்கள் ஒழிப்புச் சட்டம்

*254 வினா—திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இனாம் ரயத்துவாரி சட்டத்தை தீவிரமாக அமல் நடத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) இதுவரையில் எத்தனை கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) In order to speed up the work under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) and the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), Annual programme of settlement work under the various stages in respect of the inam estate areas and the minor inams has been drawn up in advance with reference to the availability of the Settlement staff and approved by the Board of Revenue (SE). It is proposed to complete the Settlement work under the two Acts in the year 1971. The target for each stage of Settlement work has also been fixed so as to adhere to the approved programme. The work turned out under each stage is also reviewed monthly by the Settlement Officers and the Director of Settlements. The Director is also inspecting the